# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 005/மா/2019 (ம) 163/மா/2019**

**ஆணை நாள்: 26–2–2020**

திரு. V.P. ராஜேந்திரன்,
திண்டுக்கல். – **முறையீட்டு மனுதாரர்**

திரு. வை. மருதராஜ்,
முன்னாள் மேயர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாநகராட்சி, R.M.காலனி, K.N.K. காம்பளக்ஸ் என்ற முகவரியில் வசிக்கும் திரு. V.P. ராஜேந்திரன் என்பவரது 20.12.2018 மற்றும் 25.10.2019 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்கள்.005/மா/2018 மற்றும் 163/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுக்களில், திரு. மருதராஜ், 2011 முதல் 2016 வரையிலான காலத்தில் திண்டுக்கல் நகராட்சி தலைவராகவும், பின்னர் திண்டுக்கல் மாநகராட்சி மேயராகவும் இருந்த காலத்தில் பல கோடி ஒப்பந்தப் பணிகள் மோசடியாக நடைபெற்றுள்ளது என்றும், அவரது மகன் திரு. வீரமார்பன் மாநகராட்சி மேயராகவே செயல்பட்டார் என்றும், அவர் சொல்லும் நபர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்டது என்றும், இதன் மூலம் பல கோடி ரூபாய் சொத்து சேர்த்துள்ளதாகவும், இதன் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறையீட்டு மனுக்கள் மீது திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் திண்டுக்கல் மாநகராட்சியில் 24.10.2011 முதல் 18.2.2014 வரை திரு. மருதராஜ் அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், 19.02.2014 முதல் 23.10.2016 வரை மாநகராட்சி மேயராகவும் பொறுப்பு வகித்தார் என்றும், அப்பதவி காலத்தில் மாநகராட்சியில் நடைபெற்ற ஒப்பந்தங்கள் அனைத்தும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி உரிய விளம்பரம் செய்யப்பட்டு, குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க உரிய மாமன்ற அனுமதி பெறப்பட்ட பின்பே வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்றும், மனுவில் குறிப்பிட்டது போல் திரு. மருதராஜ் அவர்கள் மகன் திரு. வீரமார்பனுக்கு திண்டுக்கல் நகர்மன்ற வளாகத்தில் தனி அறை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும், மேலும் திரு. மருதராஜ் அவர்களின் பதவிக்காலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி அன்னாரது மகன்கள் திரு. வீரமார்பன், திரு. வி.எம். செல்லக்கனி ஆகியோர் திண்டுக்கல் மாநகராட்சியில் ஒப்பந்த பணிகள் ஏதும் மேற்கொள்ளவில்லை என்றும், மேலும் மேற்படி நபர்களுக்கு ஒப்பந்தங்கள் ஏதும் வழங்கப்படவில்லை என்றும், திண்டுக்கல் நகராட்சி / மாநகராட்சியில் 2011 முதல் 2016 ஆம் ஆண்டு முடிய நடைபெற்ற ஒப்பந்தங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 05.09.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 21.10.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் 20.12.2018 நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டது என்றும், அதில் திரு. வி.எம். வீரமார்பன், திரு. எம். செல்லக்கனி, திருமதி. பத்மாவதி மற்றும் திருமதி. ஜெயகிருபா ஆகியோர்கள் மீது குற்றச்சாட்டு மனு அளிக்கப்பட்டது என்றும், குற்றம் சாட்டப்பட்ட திருமதி. எம். பத்மாவதி அவர்கள் இறந்துவிட்டார் என்றும், இதில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவில் கூறப்பட்டுள்ள வரையறைக்குள் வரமாட்டார்கள் என்பதால், தான் திண்டுக்கல் மாநகராட்சி முன்னாள் மேயர் திரு. வி. மருதராஜ் அவர்கள் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்றும், அவரை குற்றம்சாட்டப்பட்டவராக குறிப்பிட்டு புதிதாக மனு செய்கிறேன் என்றும் தெரிவித்தார். அதன்படி முறையீட்டு மனுதாரர் திரு. V.P. ராஜேந்திரன் 25.10.2019 நாளிட்ட முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார்:-

இம்முறைமன்ற நடுவத்தின் 11.11.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 24.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மாநகராட்சியின் அனுமதி பெறாமல் டெண்டர் போடாமல் வேலைகளை செய்துவிட்டு அதற்கு பின்பு

ரெக்கார்டுகளை உருவாக்குவார்கள் என்றும், ஆத்தூர் குடிமறாமத்து பணி ரூ.15 லட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டு அந்த பணிகள் செய்யப்படவில்லை என்றும், குள்ளம்பட்டியில் ரூ.5 லட்சத்தில் கிணறுகளுக்கு மூடி அமைக்கும் பணிகள் நடந்ததாக உள்ளது என்றும், ஆனால் அந்த வேலைகளும் செய்யவில்லை என்றும், தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட போட்டோ நகல்கள் 2012- ல் எடுக்கப்பட்டது என்றும், தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட 60 வேலை இனங்கள் 2012-2013 ஆகிய ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளது என்றும், குழந்தைகள் விளையாடுவதற்கான பூங்காவின் ஆர்ச்சின் மதிப்பீடு ரூ. 48 லட்சம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், திண்டுக்கல் பகுதியில் ரூ. 47 லட்சம் ரூபாயில் செய்யப்பட்ட பூங்கா வளைவு பொதுமக்களால் கட்டப்பட்டது என்றும், ஆனால் மாநகராட்சியில் பணம் எடுக்கப்பட்டுள்ளது என்றும், ஒரு கழிவுநீர் கால்வாய் மீது முன்னாள் மேயராக இருந்த திரு. மருதராஜ் வீடுகட்டி குடியிருக்கிறார் என்றும், உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள், குற்றம் சாட்டப்பட்ட திண்டுக்கல் மாநகராட்சி முன்னாள் மேயர் திரு. வை. மருதராஜ் என்பவருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 11.11.2019 நாளிட்ட கடிதத்தின்படி அனுப்பி வைக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

திரு. வை. மருதராஜ், திண்டுக்கல் மாநகராட்சி முன்னாள் மேயர் தனது 24.12.2019 நாளிட்ட கடிதத்தில் முறையீட்டு மனுதாரர் திரு. V.P. ராஜேந்திரன் என்பவர் தன்மீதும் தனது குடும்பத்தினர் மீதும் கொடுக்கப்பட்டுள்ள புகார்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றும், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், அரசியல் ஆதாயத்திற்காகவும் மிகைப்படுத்தி புனையப்பட்ட புகார்கள் என்றும், தனது மகன் திரு. வீரமார்பன் 1998-ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல் மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை போன்ற அரசு துறைகளில் முறைப்படி ஒப்பந்ததாரராக பதிவு செய்து அத்துறைகளில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் சமர்ப்பித்து முறையான பரிசீலனைக்கு பிறகு வேலை உத்தரவுகள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொண்டு வந்துள்ளார் என்றும், அரசு விதிகளின்படி, தான் திண்டுக்கல் மாநகராட்சியில் 2011-2016 வரை மேயராக தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே தனது மகன் திரு. வீரமார்பன் திண்டுக்கல் மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து மேற்கொண்டு வந்த ஒப்பந்ததாரர் பட்டியலில் இருந்து தனது பெயரினை நீக்கிக் கொண்டு அக்காலம் முதல் நாளது தேதி வரையிலும் அவரது பெயரில் திண்டுக்கல் மாநகராட்சியில் எந்தவித ஒப்பந்தப் பணிகளும் நேரடியாகவோ,

மறைமுகமாகவோ ஏதும் மேற்கொள்ளவில்லை என்றும், தனது மகன் திரு. வீரமார்பன் தனது நிர்வாகத்திலோ, திண்டுக்கல் மாநகராட்சியின் அலுவலகங்களிலோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்வகையிலும் ஈடுபட்டது கிடையாது என்றும், தனது மேயர் பணிக்காலம் கடந்த 2016-ஆம் ஆண்டு நிறைவுப்பெற்று சுமார் மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் மாநகராட்சி அலுவலர்களால் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தினை ஆய்வு செய்தும், கண்காணித்தும் வரப்பெறும் நிலையிலும், திண்டுக்கல் மாநகரில் பருவநிலை காரணமாக ஏற்பட்ட பெருமழை, கனரக வாகனங்களின் அதிக போக்குவரத்து போன்ற காரணங்களால் சாலையில் ஏற்பட்ட பள்ளங்கள் போன்ற குறைபாடுகளுக்கும் தன்னையும், தனது குடும்பத்தினரையும் பொறுப்பாக்குதல் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தனது மேயர் பணிக்காலத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் தனது மகன் திரு. வீரமார்பன் பெயரோ அல்லது இதர தனது குடும்ப உறுப்பினர்களது பெயரோ இடம் பெறவில்லை என்றும், எனவே, முறையீட்டு மனுதாரர் திரு. V.P. ராஜேந்திரன் என்பவரால் தொடரப்பட்ட புகார் மனுவினை தள்ளுபடி செய்திட கோரியுள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலங்கள், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட திண்டுக்கல் மாநகராட்சியின் முன்னாள் மேயர் திரு. வை. மருதராஜ் என்பவரது விளக்கம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது போல் திண்டுக்கல் மாநகராட்சியின் முன்னாள் மேயர் திரு. வை. மருதராஜ் என்பவரது மகன்கள் இம்மாநகராட்சியில் எந்தொரு ஒப்பந்தப் பணியும் செய்யவில்லை என்றும், அவருக்கு மாநகராட்சியில் தனி அறை ஏதும் ஒதுக்கவில்லை என்றும், அம்மாநகராட்சியில் 2011 முதல் 2016 வரை நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் திண்டுக்கல் மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி முறைகேடுகள் 2012 -2013 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றதாக தெரிவித்துள்ளார். இந்நிகழ்வுகள் நடைபெற்று ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், 2014 –ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (c) ன்படி இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்ய இயலாது என்பதால் இம்முறையீட்டு மனு மீதான விசாரணையை கைவிட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடபடுகிறது. ஆனால், முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது

தெரிவித்தவாறு கழிவுநீர் கால்வாய் ஆக்கிரமிப்புகள் ஏதும் இருந்தால் உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. V.P. ராஜேந்திரன்,
   த/பெ. பெரியகாமுத் தேவர்,
   K.N.K. காம்பளக்ஸ்,
   R.M. காலனி, திண்டுக்கல் – 1.

2. ஆணையர்,
   திண்டுக்கல் மாநகராட்சி,
   திண்டுக்கல்.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்